# ஆயுதங்களை கைவிட்டாலே இனி புலிகளுடன் பேச்சு

### — அமைச்சர் ரத்வத்தை கூறுகிறர்

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 15 இதழ் 114

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29 – 5 – 1995

29-5-1995
யாழ்ப்பாணம்

[கொழும்பு]
விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே இனிமேல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தமுடியும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குவழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டும் புலிகளுடன் பேச்சு நடத்த முடியும். அவ்வாறு ஒரு பேச்சுவார்த்தை நடைபெறுவதாக இருந்தால், விடு

[5-ம் பக்கம் பார்க்க]

## 5,800 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

[கொழும்பு]
மூன்றுவது ஈழப் போர் ஆரம்பமான காலம் முதல் இன்று வரை, கொழும்பில் 5,800 தமிழ் இளைஞர்கள் படையினரால கைது செய்யப்பட்டிருப்பதாக 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதால், விடுதலைப் புலிகளே பலமடைகின்றனர். அவர்களது போராட்டத்திற்குப் பிரசாரமாக இது அமை

[5-ம் பக்கம் பார்க்க]

### ★ அடர்ந்த காட்டில் புலிகள் அதிரடி

# மட்டு. தரவைகுளமுகாம் அழிப்பு

# 42 படையினர் உயிரிழப்பு

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பின் அடர்ந்த காட்டுப் பகுதியில் உள்ள தரவைக்குளம் இராணுவ முகாம் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 42 படையினர் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இம் முகாமை நேற்று முன்தினம் இரவு 10 30 மணியளவில் தாக்க ஆரம்பித்த விடுதலைப்புலிகள் சுமார் மூன்று மணி நேரத்தில் முகாமை பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

விடுதலைப் புலிகளின் அதிவேக அதிரடித் தாக்குதலில் 35 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் முகாமின் உள்ளேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் இழப்புகளுடன்

(5ம் பக்கம் பார்க்க)

## தொலைத் தொடர்பு கோபுரம் வவுனியாவில் குண்டுவைத்து தகர்ப்பு

(வவுனியா)
வவுனியாவில் தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்று நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் குண்டு வைத்து தகர்க்கடபட்டதாக அரசு அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இக்கோபுரம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டபோது பாரிய குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்,

தொலைத் தொடர்பு கோபுரம் முற்ருக தகர்க்கப்பட்டதால் வவுனியாவுக்கும் நாட்டின் ஏனையபகுதிகளுக்குமிடையிலான தொலைத் தொடர்புகள் முற்ருக துண்டிக்கப்பட்டு

(5ம் பக்கம் பார்க்க)

## கிழக்கை படையினர் கைப்பற்றும் சாத்தியம் தற்போது இல்லை

[கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது. வடக்கை போன்றே கிழக்கிலும் அவர்கள் தம்மை நன்கு பலப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கிழக்கை படையினர் முற்ருக தம்வசப்படுத்தும் சாத்தியம் தற்போது இல்லை.

இவ்வாறு மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் குறிதது பி, பி. ஸி தெரிவிக்கையில் குறிப்பிட்டது. பி. பி. ஸி. மேலும் கூறுகையில்;

[6ம் பக்கம் பார்க்க]

## பூரணமான யுத்தத்தில் இன்னமும் அரசு ஈடுபடவில்லையாம் – சந்திரிகா கூறுகிறர்

(கொழும்பு)
அரசாங்கம் இன்னமும் பூரணமான யுத்தத்தில் ஈடுபடவில்லை. தம்மை பாதுகாக்கும் அதேவேளையில் எதிரியை பலவீனப்படுத்தும் வகையிலேயே யுத்தத்தில் ஈடுபடுகின்றேம் என ஜனதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

தேசிய தகவல் நிலையத்தை நேற்று திறந்து வைத்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; பொதுமக்களின் இழப்புக்களை இயன்றளவில் தவிர்க்குமுகமாக மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திறமை வாய்ந்ததும் பொறுப்பு வாய்ந்ததுமான ஓர் ராணுவ

[5-ம் பக்கம் பார்க்க]

## மட்டு. மோதலில் 16 புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு தரவைக் குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இராணுவ முகாம் தகர்ப்பின்போது லெப். கேணல் விஞேதன் உட்பட 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப். கேணல் விஞேதன் (தம்பிப்பிள்ளை பத்மநாதன் பெரியதீவு - மட்டக்களப்பு) உட்பட வீரச்சாவடைந்த 16 போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். -சி

## புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்

(மட்டக்களப்பு)
தரவைக்குளம் இராணுவ முகாம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்ட போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி - 81 ரக மோட்டார் -02
★ அதற்குரிய வைபோட் - 02
★ பேஸ்பனேட் - 02
★ ஸ்கோப் - 02

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதலில் ஹெலி பலத்த சேதம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு தரவைக் குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் போது படையினருக்கு உதவிக்கு வந்த ஹெலிகொப்டர் ஒன்றும் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் முகாம் மீது கடும் தாக்குதலை நடாத்திக்கொண்டிருந்த போது ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதலை நடாத்தியது

இக் ஹெலி மீது புலிகள் தாக்குதலை நடாத்தியதால் அக் ஹெலி சேதமடைந்ததுடன் அவ்விடத்தைவிட்டு உடனடியாகவேசென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## படையினர் பலரை காணவில்லையாம்

(கொழும்பு)
மட்டக்களப்பு தரவைக் குளம் படை முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது படையினர் பலர் காணமல் போய் விட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளின் மூன்று மணி நேர தாக்குதலின் போது இவர்கள் காடுகளுக்குள் தப்பி ஓடியிருக்கலாம அல்லது புலிகளிடம் பிடிபட்டிருக்கலாமென வும் படை வட்டாரங்கள் கருதுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது

எனினும் காணமல் போன படையினரை தேடும்பணியில் தற்போது பெருமளவு படை

(6-ம் பக்கம் பார்க்க)

## அன்பளிப்பு

(நெல்லியடி)

கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களின் நலன்கருதி சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான 200 அப்பியாசக்கொப்பிகளை அண்மையில் கரவெட்டி பங்குத்தந்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். 160

## நூலக சேவை

(வட்டுக்கோட்டை)

சங்கானை பிரதேச பொது நூலகததில் வாசகர்கள் தொகை தற்பொழுது பெருமளவில் அதிகரித்துள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரிவில் இந்த நூல் நிலையம் மிகப் பெரிய நூல் நிலையமாகவும் பெரும் தொகையானோர் பயன்படுத்தும் நூல் நிலையமாகவும் திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. 139

## சுயதொழில் முயற்சிக் கடன்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் சுயதொழில் முயற்சிசென றெட்பாஞவினல் வழங்கடபடவிருக்கும் சுயதொழில் முயற்சிக் கடன் அடுத்தமாத முற்பகுதியில் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொருவருக்கும் முன்பு வழங்கியகடன் மீளளிக்கப்பட்டதை தொடர்ந்து இக்கடன் மீண்டும் வழங்க ஏற்பாடாகியுள்ளது. 2வது தடவையாக தலா 2000 ரூபா வழங்கப்படவுள்ளது. -90

## இராசி பலன்

29-05-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு வைகாசி -15)

அமாவாசை பி. ப. 3-04 வரை கார்த்கை முழுவதும் சித்தயோகம், இராகுகாலம் காலை 7-22 முதல் 8-52 வரை சுபவேளை காலை 11:52 முதல் 1-22 வரை.

மேடம்; தொழில் எதிர்ப்பு உறவினர் சஙகடம், துயரம்

இடபம்: கூடிப்பேசுதல், சுபகாரிய சிறப்பு, பணவரவு.

மிதுனம்: முயற்சி தாமதம், வருவாய் பாதிப்பு, அலைச்சல்.

கடகம்; தொழில் லாபம், வசதியான மாற்றம், மனமகிழ்ச்சி.

சிங்கம்- உள்ளக்கிடக்கை, தொழில் பாராட்டு, பயணம்.

கன்னி: மதிப்புக்குறைதல், அகால உணவு, மனைவி துன்பம்:

துலாம்: அடங்கிப் பேசுதல் வெளியார் தலையீடு, யோசனை.

விருச்சிகம்: திருமண சிறப்பு புகழ் பாடுதல் தெய்வ தரிசனம்.

தனுசு: வேண்டிய உறவு, சகோதர உதவி, விருந்துண்ணல்.

மகரம்: அமைதியின்மை, வைத்திய செலவு, குடும்ப கவலை

கும்பம். நியாயம் கற்பித்தல், இனனைபெருமை, புதிய முயற்சி,

மீனம்: வெகுஜன விரோதம், பணமுடை, அவமானப்படல்.

— ஜோஸ்யர்

# நோயாளிகள் எவரும் மருந்தின்றி உயிரிழப்பதை அனுமதிக்க முடியாது

## மருத்துவப் பிரிவு டாக்டர் உரை

(நெல்லியடி)

நோயாளர் நலன்புரி சங்கம் தமிழீழ தேசிய தலைவரின் நேரடி கண்காணிப்பில்இயங்குகின்றது. இதனல் இன்றைய நிலையில் நோயாளிகள் எவரும் மருந்தின்றி உயிர்பிரிவதை நாம் அனுமதிக்கமுடியாது.

இவ்வாறு பருத்தித்துறை அரசினர் ஆதார [வைத்தியசாலையில்நடைபெற்ற நூறருண்டுமலர்வெளியீட்டுவிழாவில் நூலை வெளியீட்டு வைத்துப் பேசிய விடுதலைப்புலிகள் மருத்துவப்பிரிவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி செல்வி பத்மஜ ராஜினி குறிப்பிட்டார்.

நோயாளர் நலன்புரி சங்க ஆதரவில் தலைவர் டாக்டர் எஸ். சிவபாலன் தலைமையில் இந்நூல் வெளியீட்டு விழா ஆரம்பமானது.

அங்கு தொடர்ந்து பேசிய செல்வி பத்மலோஜினி 1984 முதல் 1989 வரையும் நான் இவ் வைத்தியசாலையில் டாக்டராகப்பணிபுரிந்தேன். அன்றைய காலத்திலுள்ளசேவைத்தரம் இன்று இல்லாதிருப்பது பெரும் கவலையைத் தருகின்றது என்றார். 160-ரி

## இலவச முதலுதவிப் பயிற்சி வகுப்பு

(கொழும்புத்துறை)

ஸ்ரீகணேசா வித்தியாவிருத்திச சங்க யாழ் நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் இலவச முதலுதவி பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்விலவச முதணிதவிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை எதிர்வரும் யூன் மாதம் 5ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் மேற்படிநிலையத்தில நேரில் வந்துபெயர் விபரங்களைபதிவுசெய்துகொள்ளுமாறு நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். -152

## உதவிப்பணம் வழங்கப்படுகிறது

(கொழும்புத்துறை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு கடந்த சித்திரை மாதத்திற்கான உதவிப்பணம் இப்பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள சகல தபால் அலுவலகங்கள் ஊடாகத்தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பணத்தை பெறுபவர்கள் தத்தமது பகுதி தபால் அலுவலகத்தில் நேரில்சென்று பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கபட்டுள்ளது. 154

# பழமரக் கன்றுகள்

## மக்களுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கனி மரங்களை வீட்டுத் தோட்டங்களில் நடுகை செய்து குறுகியகாலத்தில் பழவகைகளைப் பெற்றுப் பயனடையக்கூடியதாக பழமரக் கன்றுகளை கொள்வனவு செய்து வளர்த்து, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மக்களுக்கு விநியோகமசெய்து வருகிறது.

இந்த நிறுவனத்தின் காமதேனு கூட்டுப பண்ணையில 500 நல்லரசு ஒட்டுமாமரக் கன்றுகள், 600 நாரத்தையில் ஒட்டிய தோடங் கன்றுகள் 500 நாரத்தையில் ஒட்டிய எலுமிச்சைக்கன்றுகள், 500 காற்றுப் பதிவைத்த கொடி எலுமிச்சைக் கன்றுகள் 500 மாதுளங்கன்றுகள், 1000 ஒரு கிலோ பழம் காய்க்கும் கொய்யாக் கன்றுகள். 1000 கிட்டு பப்பாசிக் கன்றுகள், 500 பலாக்கன்றுகள் ஆகியவற்றை இந்த வருட காலபோகத்துக்கு நடுகைக்கு ஏற்றவாறு தயார் செய்வதில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. -சி

## நள்ளிரவில் வயோதிபரை தாக்கி வழிப்பறி

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியால் இரவு 10 மணியளவில் வந்துகொண்டிருந்த தே. அழகையா (60 வயது) என்னும் வயோதிபரை வழி மறித்த இனந் தெரியாத சிலர் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த மணிக்கூடு, மோதிரம், மணிபேர்ஸ் ஆகிவற்றை பறித்து சென்றுவிட்டனர்.

அளவெட்டிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை வீதியில் வசிக்கும இவர் தற்போது யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். 166

## யாழ். மாவட்டத்தில் தபாலக ஊழியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(கொழும்புத்துறை)

வடமாகாணத்திலுள்ள சகல தபாலகங்களிலும் காணப்படும் சமயாசமய ஊழியர் வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்களை சேர்த்துக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி தபால் மாஅதிபரிடமிருந்து யாழ்ப்பாணம், மன்னர், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத் தபால் அத்தியட்சகர்களுக்கு சுற்று நிருபம் மூலம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தபாலகங்களிலும் மூன்று நிரந்தர ஊழியர்களுக்கு ஒரு சமயாசமய ஊழியர் என்ற அடிப்படை புதிதாக ஆட்களை நியமனம் செய்யப்படவிருக்கிருர்கள.

இவ்வெற்றிடத்துக்கு எட்டாம் வகுப்பில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இம்மாத இறுதிக்குள் யாழ். மாவட்டத்திலுள்ள வெற்றிடங்கள் யாவும் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் பத்திரிகை வாயிலாக கோரப்படுமென பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. சடாட்சரநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட தபாலகங்களில் மொத்தம் அறுபத்தைந்து சமயாசமய ஊழியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாக அறிவிக்கபட்டுள்ளது. -154ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-05-29

திங்கள் இரவு

8 02 தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
8-20 சமகாலப்பார்வை
8-30 செய்திகள்
8-40 தரிசனம் - நிகழ்ச்சியில் எழுத்தாளர் திரு. செம்பியன் செல்வன் அவர்களுடனன செவ்வி

1995-05-30

செவ்வாய் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 இன்றைய தாரகை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-05-29

திங்கள் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 ஆழியமுதம்
5-30 மாணவர் பக்கம்
6 00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
6-02 நேயர் நெஞ்சம்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 என் தெரிவு
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## மாணவரின் கலைத்திறனை வளர்க்க கலைவிழா

(உடுவில்)

மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் நோக்குடன் சங்கானைக் கோட்டப் பாடசாலைகளினுல் எதிர்வரும் ஜூன் மாத முதற்கிழமையில் கலைவிழாவொன்று நடத்தப்படவுள்ளது.

இக்கலைவிழாவில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற உள்ளனர்.

கல்வி வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிந்பாளர் திரு. சு. கணபதிப்பிள்ளை தலைமையில் கலைவிழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

கலைவிழாவை நடத்துவற்கென கலைவிழா ஏற்பாட்டுக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. 109

## சாளரம்போட்டிமுடிவுதிகதி 10 -ம் திகதி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சாளரம் 4வது ஆண்டு நிறைவுப் போட்டிகள் தொடர்பாக ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கமைய மாணவர்கள் மட்டத்தில் நடைபெறும் கட்டுரை, கவிதை, ஓவியம், விஞடி வினப் போட்டிகளுக்கான முடிவு திகதி பல அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்தமாதம் 10ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகளைப் பாடசாலை மட்டத்தில் நடாத்தி அதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் பெயர்களையும், ஆக்கங்களையும் அந்தந்த பகுதிக் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறு அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விஞடி வினப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஒவ்வொரு பாடசாலையும் ஐந்து மாணவர்களின் பெயர்களை 10ம் திகதிக்கு முன்னர் கோட்டங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

சகல போட்டிகளிலும் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும், கோட்ட மட்டத்தில் முதல் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் பெறுதி மிக்க பரிசுகளும் சான்றிதழ்களும் சாளரம் 4வது ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும். -ரி

## சைக்கிள் மீட்பு

(பண்டத்தரிப்பு)

சங்கானை காவல்துறையினர் அராலி கிராமத்திலுள்ள வீடு ஒன்றிலிருந்து திருடப்பட்ட சைக்கிள் ஒன்றை கைப்பற்றியுள்ளனர். சங்கானை காவல் துறையில் அலுவலகத்தில் இந்தசைக்கிள் வைக்கப்பட்டுள்ளது. 72

## சங்கானையில் பால் கொள்வனவு நிலையம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை வட்டத்தில் பால் கொள்வனவு நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கானை வட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்போர்களை ஊக்குவிப்பதற்காகவெண்மை விலங்கு வேளாண்மை சேவை ஊடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இம்முயற்சியை எடுத்துள்ளது.

காலை 6 மணியிலும் மாலை 3 மணியிலும் பால கொள்வனவு செய்து விற்பனை செய்வதோடு ஏனைய பகுதிகளுக்கும் நடமாடும் விற்பனவு சேவை செய்யப்படுகின்றது. மேலும் மிகுதியாகும் பாலில் தயிர் பொன்ற உப உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது.

## வாழைச் செய்கை பெருமளவு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வீசிய காற்றினுல் யாழ். மாவட்டத்தில் 110 ஹெக்டேர் நிலப்பரப்பில் உள்ள வாழை மரங்கள் பாதிக்கப்பட்டு அழிந்துள்ளன.

யாழ். மாவட்ட விவசாய திணைக்களத்தின் வாழைகள் அழிவு புள்ளிவிபரப்பட்டியலில் இருந்து தெரியவந்தது.

இம்மாத முற்பகுதியில் பெய்த மழையுடன் கூடிய காற்றினலேயே வாழை மரங்கள் இவ்வாறு பெருமளவில் அழிந்து பாதிக்கப்பட்டுள்ளன.

இதனுல் இவ்வாழைச் செய்கை அளவினுல் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளன. 170-ரி

மணிவாக்கு

மனத்துக்கு இரண்டு நிலைகள் உண்டு. பிரேமை ஏற்பட்டால் மனம் மிகவும் மெல்லியதாக இருக்கும். துவேஷம் ஏற்பட்டால் மனம் மிகவும் கடினமாகும்.

— ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

# உணவுப் பொருட்களுடன் வந்த 300 லொறிகள் வவுனியாவில் தடுத்துவைப்பு

## வன்னியில் உணவு நெருக்கடி

[யாழ்ப்பாணம்]

கடந்த 19ம் திகதிக்குப்பின் இன்றுவரையான நாட்களில் வன்னிப்பிரதேசம் முழுவதுக்குமாக பதினைந்து மா லொறிகள் மட்டுமே தாண்டிக்குளம் வழியாக வர அனுமதிக்கப்பட்டன.

300க்கும் மேற்பட்ட லொறிகள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வன்னிப் பிரதேசம் முழுவதுக்குமாக தேவைப்படும் அத்தியாவசிய உணவும் மற்றும் பொருட்களும் ஏற்றிய லொறிகள் வவுனியாவில் 35 நாட்களாக படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் உணவுப் பொருட்களுக்கான நெருக்கடி அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வரையான 35 நாட்களில் 15லொறிகளே தாண்டிக்குளம் தாண்டி வன்னிக்கு வந்துள்ளன.

தினமும் மாவட்டம் ஒன்றுக்கு 5 லொறிகள் செல்ல அனுமதிக்கப்படும் என வவுனியா இராணுவ அதிகாரி அறிவித்திருந்தும் கூட அது இதுவரை நடைமுறைக்கு வரவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு மட்டும் ஒரு மாதத்திற்கு 103 லொறிகள் மா, 36 லொறி சீனி, 12 லொறி பருப்பு, 26 லொறி ஏனைய உணவுகள், 70 லொறி மண்ணெண்ணை ஆகியன தேவையாகும். ஆனால் கடந்த 35 நாட்களுக்குமாக 15 லொறிகளை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயத்திற்கென 5 லொறி பசளை தேவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ரி

# சந்திரிகாவிடம் இனப்பிரச்னைக்கான தீர்வுத்திட்டம் எதுவும் இல்லை

## நவசமசமாஜ கட்சி குற்றச்சாட்டு

[கொழும்பு]

தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வுத் திட்டம் தம்மிடமுள்ளதாக சிறிலங்கா அரசு கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. ஜனாதிபதி சந்திரிகா முன்னுக்குப்பின் முரணாக தரும் தகவல்கள் இதனை வெளிப்படுத்துவதாக நவசமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

1994 டிசம்பரில் அரசியல் தீர்வுகளை கொண்ட ஆலோசனைகளை அரசு முன்வைத்துள்ளதாக சந்திரிகா கூறினார். பின் அரசியல் தீர்வுத் திட்டத்தை ஆராய விடுதலைப் புலிகள் மறுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பின் இன்னும் சில வாரங்களில் அரசியல் தீர்வுகளை தயாரித்து மக்கள் முன் வைப்போம் என்கிறார்.

இவ்வாறு முன்னுக்குப்பின் முரணான தகவல்களை வெளியிட்டு தம் இயலாமையை- இல்லாமையை வெளிப்படுத்தி வருவதாக அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. -ரி

## கருத்தரங்கு

(நெல்லியடி)

தமிழ் மக்களின் இன்றைய நிலையையும் போராடவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும் வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் போர்க்காலக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. 160

# சிற்றுண்டி பரிமாறல் குறித்து உணவகங்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

உணவகங்களில் உணவு பரிமாறப்படுவது குறித்து கடந்த 18-ந் திகதி நடைபெற்ற மாவட்ட சூழல் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் பல குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டன.

உணவகங்களில் குறிப்பாக பலகார வகைகள், சிற்றுண்டிகள் பரிமாறப்படுகின்றபோது அவைகள் அவற்றினை உண்பவர்களுக்கு, அவர்கள் கேட்கப்படுவதற்கு அதிகமாக வழங்கப்படுவதுடன் உண்ட பின்னரும் அவைகள் மேசையில் இருப்பதனால் இலையான், கொசு போன்ற கிருமிகள் அசுத்தப்படுத்த வாய்ப்பு ஏற்படுகின்றது என்றும் அத்துடன் உணவருந்துபவர் தோல் வியாதிகளினால் பாதிக்கப்பட்டு இருந்தால் அல்லது அவர்களின் கைகள் சுத்தமில்லாமல் இருந்தால் அவர்கள் தொடப்பட்டு விடுகின்ற போது அவ்வுணவுகளும் அசுத்தம் அடைகின்றன.

இந்த உணவுப் பொருட்கள் மீண்டும் உணவு உண்ண வருபவர்களுக்கு வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது

உணவகங்களில் இம்முறையில் உணவு பரிமாறுவது சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்துவடன் உணவு உண்பவர்களுக்கு தொற்று வியாதிகளை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது. இதனால் இம்முறையினை தவிர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனமேற்படிகூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ரி-261

## சத்துணவு விநியோகம்

(வட்டுக்கோட்டை)

வலிமேற்கு பிரதேச செயலக நடமாடும் செயலக சேவைத் திட்டத்தின்கீழ் அண்மையில் வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தில் நடமாடும்செயலக சேவை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது வலிமேற்கு பிரதேச சபையினரால் போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கு ஜீவாகரம்' சத்துணவு வழங்கப்பட்டது. 139

# நமது நோக்கு

## கற்பூரம் கொளுத்துமுன்...

கோவிற் சன்னிதானம்— பக்தர்கள் பார்த்திருக்கிறார்கள்; உடுக்கு இன்னும் அடிக்கப்படவில்லை.

ஆனால் கோவிற் குருக்கள் கற்பூரம் கொளுத்து முன்பே சன்னதம் கொள்ளத் தொடங்கிவிட்டார், உருவில் ஆடுபவர்!

ஆட்டத்தில்- அவ்வளவு அக்கறை அவருக்கு!

இன்று- இங்கு- ஜனாதிபதி சந்திரிகா, "தீர்வுத் திட்டம் உண்டு; ஆனால் வெளியிட்டால் எதிர்ப்பு வரும்!" என்று கூறிச் சுருதி சேர்த்திட-

மூலையில் முடங்கிப் போயிருந்த இனவாதிகள் மீண்டும் உருக்கொண்டு வந்து "தரிகிடதோம்!" என்று தாளம் போட்டு ஆரம்பிக்க-

"அங்குல நிலம் தானும் அவர்களுக்குஇங்கில்லை!" எனப் பௌத்த சங்கங்கள் அறிக்கை தந்து வீணை மீட்டிட-

சமஷ்டித் தீர்வுக்கெதிரான பிரசாரத்தைத் தென்னிலங்கைப் பத்திரிகைகள் முடுக்கிவிடத் தொடங்கிவிட்டன.

இந்த வகையில்- 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை முற்பக்கச் செய்தி பிரசுரித்து மக்கள் கவனத்தை நீதியான தீர்வுச் சிந்தனையிலிருந்து திசை திருப்பி இருக்கிறது.

இந்த நாட்டிலே- இது ஒன்றும் புதுமையான வியூகம் அல்ல.

தமிழ் மக்களின் நீதியான போராட்டங்களை, அமைதி வழிப் போராட்டங்களை முறியடிக்க, அடுத்தடுத்து வந்த அரசுகள் கையாண்ட மிகப் பழைய உத்திகள்...

இந்தப் பழைய கீதப்- பழைய தாளம்- பழைய சுருதி- பழைய பக்கவாத்தியங்களைக் கொண்ட கச்சேரிகளைக் கேட்டு அடங்கிப்போகும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதை இன்னும் உணராது இருப்பது வேடிக்கையானது மட்டுமல்ல, வேதனைக்குரியதும் ஆகும்.

வடகிழக்கின் யதார்த்த நிலை என்ன?

அஞ்சி நடுங்கி ஒடுங்கி ஒதுங்கிப் போகும் நிலையிலா போராட்ட உணர்வுகள் உள்ளன?

நமது மண்ணை மீட்டு, நமது உரிமைகளைப் பேணும் வழியில் வீறுநடைபோடுவதிலேயே நமது முழுக் கவனமும் செல்லவேண்டியது அவசியம்!

## பலதும் பத்தும்

### கவலை தீர்ந்திட...!

ஒருவன் ஆற்றில் குதித்து உயிரைப் போக்க முற்பட்டபோது... தடுத்து நிறுத்தி. "என்ன கவலை? ஏன் தற்கொலை முயற்சி?" எனக் கேட்டானும் இன்னொருவன்.

அவன் கூறிய கதைகளைக் கேட்டவன், "அப்படியா? உன் கவலைகளைவிட எனது கவலைகள் பத்து மடங்கிற்கு மேல்! நானே முதலிற் குதித்துத் தற்கொலைசெய்ய வேண்டும்!" எனக் கூறிக் குதிக்க முற்பட்டானும்!

அப்போது... முதலில் தற்கொலை செய்ய முற்பட்டவன், மனம் மாறி, "இதற்கெல்லாம் போய் தற்கொலை செய்யலாமா?" என ஆலோசனை கூறித் தடுத்தானும்! "வீட்டுக்கு வீடு வாசற்படி!" என்ற ஞானம் பிறந்தது அவனுக்கு!

பிறரிடம் சொல்வதால் கவலைகள் குறையும். அதற்காக... அடிக்கடி சோக புராணத்தை ஆரம்பித்துவிட்டால் "இந்த மனுஷன் வந்துவிட்டானே!" என்ற கவலை கேட்பவனுக்கு வந்துவிடுமாம்!

அடக்கி... அழிந்து போகாமல்... சொல்லி அழுதாற் சோகம் போய்விடும் அல்லவா?

— மயூரன்

# சப்புகஸ்கந்த எண்ணெய் நிலையத்தில் இடம்பெற்ற மோசடிகள் அம்பலம்

## தொடர்ந்து விசாரணை

(கொழும்பு)

பெற்றோல் கூட்டுஸ்தாபனத்தின் சபுகஸ்கந்த எண்ணை சுத்திரிகரிப்பு நிலையத்தில் இடம்பெற்ற பலமோசடிகள் வெளிவந்துள்ளன.

மின்சக்தி அமைச்சு ஊழல், மோசடி பற்றி விசாரணை செய்து வரும் ஆணைக்குழு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது

இதுவரைக்கும் சுமார் 300 முறைப்பாடுகள் இதுதொடர்பாக கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் சில முறைப்பாடுகள் நிதி சம்பந்தமான விதிமுறைகள் மீறப்பட்டுள்ளவற்றோடு தொடர்புள்ளவை என்று தெரிவிக்கப்படுகிறது.

சப்புகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு ஆலை இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணையை சுத்திகரிப்பு செய்கின்றது.

எரிபொருள் மற்றும் பலவற்றை உற்பத்தி செய்து உள்ளூர் தேவையை நிறைவேற்றுகின்றது.

125 ஏக்கர் காணியில் இருக்கும் இந்த சுத்திகரிப்பு ஆலை தேசிய வருமானத்திற்கு பெரும் பங்காற்றுகிறது

முன்னைய ஆட்சியின்போது இடம்பெற்ற முறைகேடுகளும் ஊழல்களும் இந்த ஆலையின் உற்பத்தி சீர்குலைவதற்கு காரணமாக இருந்தன என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

இருபது தொன் நிறையுள்ள இரும்பு பாலங்கள் கூட்டுஸ்தாபனத்தின் வளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

எண்ணைத் தாங்கிகளின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தங்கள் வழங்குவதில் முறைகேடுகள் நிகழ்ந்தன. இவை உட்பட பல்வேறு ஒழுங்கீனங்கள்பற்றி ஆணைக்குழு கவனத்தைச் செலுத்துகின்றது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட எண்ணைத் தாங்கிகள் பயன்படுத்தப்படாமல் இருப்பது கோடிக்கணக்கன ரூபாய் செலவில் தேவையற்ற இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை ஆகியன தொடர்பான முறைப்பாடுகளையும் ஆணைக்குழு விசாரணை செய்யும்.

கூட்டுஸ்தாபனத்தின் வளவில் புதைக்கப்பட்டிருந்த இரும்பு பாலங்களை மீட்டெடுக்கும் வேலைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின. -ரி

# தமிழகத்தில் தொண்டாவுக்கு கறுப்புக்கொடி காட்ட நடவடிக்கை

[சென்னை]

இலங்கை அமைச்சர் தொண்டமான் அடுத்தமுறை தமிழகம் வரும்போது அவருக்கு கறுப்புக்கொடி காட்டப்போவதாக தமிழக இந்திரா காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் முகமட் குலாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை புகழ்ந்து பேசியுள்ளார்.

[5-ம் பக்கம் பார்க்க]

அடுக்களைச் சாம்பல் அருமையான பொட்டாஸ்

## 1987-ம் ஆண்டு மே 29-ல்

# வடமராட்சியில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய 'ஒப்பரேஷன்லிபரேஷன்'

வடமராட்சி மீது 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்னும் பெயரில் பெரும் படையெடுப்பு நடத்தி பெரும் அழிவுகளையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்திய அந்த நாட்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில பெரும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தியவையாகும்.

1987 மே 26ம் திகதி திடீர் ஊரடங்குச் சட்டம் யாழ். குடாமீது பிறப்பிக்கப்பட்டு விமானத்தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனுல் யாழ்.குடா நாட்டு மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினர். இந்த வேளையில்தான் மே 29ம் திகதி வடமராட்சி மீது 'ஒப்றேஷன் லிபறேஷன்' என்னும் பெயரிலான பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்கியைக் கைப்பற்றுவதற்கு பத்தாயிரம் இராணுவத்தினரும் ஏழு பொம்மர் விமானங்களும் ஐந்து ஹெலிக்கொபடர்களும் மூன்று அவ்ரோ விமானங்கள் இரு கப்பல் 12 பீரங்கிப் படகுகள் பயன்படுததப்பட்டன.

வல்வெட்டித்துறையில் கொம்மந் தெருபகுதியிலுள்ள தூர்ந்துள்ள குளமொன்றில் முதலில ஹெலிகொப்டரிலிருந்து இராணுதத்தினர் இறககப்பட்டனர் இதனைத் தொடர்ந்து கடல் மார்க்கமாக ஆயிரக் கணக்கான இராணுவத்தினர் வல்வெட்டித்துறையை முற்றுகையிடத் தொடங்கினர்.

எங்கு திரும்பினும் விமானங்களின் இரைச்சலும் ஷெல் சத்தங்களும், பீரங்கிச் சத்தங்களும் துபபாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன. இதனுல் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற முடியாது சிரமப்பட்டனர் சிலர் அருகிலுள்ள ஆலயங்களில் சென்று தஞ்சமடைந்தனர்.

இராணுவ தாக்குதலுக்கு அஞ்சி அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் உட்பட பல ஆலயங்களில் மக்கள் தஞ்சமடைந்திருந்தனர், அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மட்டும் சுமார் 5000 பேர் வரை தஞ்சமடைந்திருந்தனர். இந்தக் கோயிலை நோக்கி இராணுவத்தினர் எட்டுத் தடவை ஷெல் தாக்குதலை நடத்தினுர்கள். இதனுல் 50 பேர் வரையில் ஸ்தலத்திலே பலியானுர்கள். நூற்றுக்கு மதிகமானவர்கள் காயமடைந்தனர்.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள், விமானங்களின் இரைச்சல்கள் போன்றவற்றினுல் பலர் அதிர்ச்சியினுலும் ஏககத்தினுலும் இறந்துள்ளனர்.

ஷெல் விழாத வீடுகளோ, பொம்மர் அடிக்காத கட்டிடங்களோ அவ்ரோபீப்பாக்குண்டுகள் விழாத இடங்களோ வடமராட்சியில் இல்லை என்று சொல்லுமளவிற்கு சிறிலங்கா படையினர் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டனர்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புற்றளையிலுள்ள ஆலயமொன்றில் தஞ்சமடைந்திருந்தபோது ஆயிரத்துஐநூறு பேரும் வடமராட்சியின்பல பகுதிகளிலிருந்தும் ஐயாயிரம் இளைஞர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காலி பூஸா முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்தநேரம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு, வேலும்மயிலும் அகதியாக தஞ்சமடைநதிருந்த இடத்தில் அவரின் கண்முன்னுலே ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட ஹலிபர் தாக்குதலினுல் பத்துப்பேர் படுகாயமடைந்தும், மூவர் இறந்ததும் குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி பகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் தொடர்ந்து வைத்திருப்பதற்காக அரசாங்கம் மண்டான், யாக்கரைச்சந்தி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், குடத்தனை, நாகர் கோயில், இன்பருட்டி திக்கம் சந்தி வல்வெட்டி, வல்லிபுரக் கோயில், முள்ளி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டு இராணுவ முகாம்களும் காவலரண்களும் அமைத்திருந்தனர்.

'ஒப்பறேஷன் லிபறேஷன் பகுதி ஒன்றின் இறுதி நாளன்று புலோலியிலுள்ள உதய கதிர்காமம் பகுதியில் வெளிநாட்டுக் கூலிப்படையைச் சேர்நத இருவர் இராணுவத்துடன் ஜீப்பில் சென்றதை தாம் கண்டதாக இப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சிப் பகுதி யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன் முற்ருக துண்டிக்கப்பட்டிருந்தது. இரு பதினுயிரத்திற்கும மேற்பட்ட மக்கள் தென்மராட்சியில் தஞ்சமடைந்திருந்தனர்.

ஒப்பறேஷன்லிபறேஷன் நடவடிக்கையின்போது ஆயிரக் கணக்கான மக்கள் படையினரால் கொல்லப்பட்டதாகவும் ஐயாயிரத்திற்கும் மேறபட்டவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அரச அதிபருக்கு தெரிவிக்கப்பட்டது.

ஜுன் 29ம் திகதி முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சியில் கரவெட்டி, புத்தளை கொற்ருவத்தை, கரணவாய், கம்பர்மலை, வல்வெட்டி, கெருடாவில், மரியதுணை, புலோலி ஆகிய பகுதிகளே கூடுதலாக பாதிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது பொறிவெடி, கண்ணிவெடி, சினைப்பர் தாக்குதல்களில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது

அப்போது பிரிகேடியராக இருந்த டென்சில் கொப்பேகடுவ இப்பகுதியில் இடம்பெற்ற பொறி வெடியில் மயிரிழையில் உயிர் தப்பினுர். கொப்பேகடுவ தலைமையிலான இராணுவ அணி தொண்டமாஞறு பகுதியிலிருந்து கிழக்குப்புறமாக நகர்ந்தது. இவர்கள் சென்ற பாதையில் இருந்த வீட்டை சூழ்ந்து கொண்ட படையினர் உள்ளே நுழைவதற்கு ஆயத்தமாக அதன் அழைப்பு மணியை அழுத்தினர். அவ்வேளை பொறிவெடி ஒன்று வெடித்தது. இதனுல வீடு தரை மட்டமாகியதுடன் மணியை அழுத்திய சிப்பாயும் அவரருகில நின்ற சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். கொப்பேகடுவ மயிரிழையில் தப்பினுர்.

இவ்வேளையில் பெரும் படைகளைக் குவித்து வடமராட்சியில் தனது கையினை மேலோங்கச்செய்ய அரசபடையினர் எடுத்த முயற்சியை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம்மீது கரும்புலித் தாக்குதல் நடத்தி கப்டன் மில்லர் முறியடித்தார்.

மில்லரின் தாக்குதலினுல் வடமராட்கியில் தொடர்ந்து 'ஒப்பறேசன் லிபறேசன்' நடவடிக்கையை தொடரமுடியாத நிலையேற்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் கடந்த எட்டு வருடங்களுக்கு முன் நடந்த அரச படையினரின் கொரடுங்கள் மக்கள் நெஞ்சத்தைவிட்டு என்றும் அகலாது.

-ரி

— துரை —

# எமதுவளங்களை பயன்படுத்தி நாட்டை முன்னேற்றுவோம்!

## மாணவரமைப்பு பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார ரீதியாக ஒரு நாடு வளர்ச்சிபெறவேண்டுமானுல அந்நாடு விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிபெற்ற நாடாக இருக்கவேண்டும.

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவ அவையினரால் நடத்தப்பட்ட நுண் தொழில இளைஞன் நூல வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டுவிடு தலைப்புலிகள் மாணவர் அமைப்பு யாழ், மாவட்டப்பொறுப்பாளர் திரு சங்கர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி மாணவர் அவைப் பிரதித்தலைவர் செல்வன் ம. அனரன் சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சங்கர் தொடர்ந்துஉரையாற்றுகையில், எமது பிரதேசம் இன்று தொழில் நுட்ப வளர்ச்சியில் எவ்வதமுன்னேற்றத்தையும் அடையவில்லை. எமது பிரதேசங்களில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி எமது பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். எமதுபிரதேசத்திலுள்ள கடல் வளம், பனை வளம் எமக்கு நல்ல பலனைத்தரக் கூடிய வளங்களாக உள்ளது. இந்தக் கடல் மற்றும் பனை வளங்களை நாம்முழுமையாகப் பயன்படுத்துவோமேயானுல் எமது பொருளாதாரவளர்ச்சியில முன்னேற்றம் காணலாம்.

நாம் இன்று மூன்றும் கட்ட ஈழப்போரை நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்த மூன்றும் கட்ட ஈழப்போருடன் தமிழீழம் மலருவது நிச்சயமாகிறது. இந்த வகையில் நாம் எமது பிரதேசத்திலுள்ள சகலவளங்களையும் பயன்படுத்தி எமது பிரதேசப் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணவேணடும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுசிறபபித்தார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வி பி பாலசிங்கம், விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி வாசுகி உட்படப் பலர் உரையாற்றினுர்கள்.

162-ரி

## தமிழக மீனவர் தாக்குதல்

# இலங்கை அரசுடன் பேச ராவுக்கு வலியுறுத்து

[சென்னை]

தமிழக மீனவரை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாககி வருவதனை நிறுதத உடனடியாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர் இலங்கைப் படையினரால் தாக்கப்படுவது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் மதிய அரசிடம் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1990 ம் ஆண்டுக்குப்பின் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ரி

# "ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு தனியான சங்கம்வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு தனியான சங்கம் ஒனறு அமைக்கப்படவேண்டுமென் றுஅண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஒய்வு பெற்ற பலடசாலையின் அதிபர் ந. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் ஒய்வூதியத்தில் ஏற்படும் வித்தியாசங்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக 30-09,94 இல் ஒய்வு பெற்ற ஓர் ஆசிரியருக்கும் அவரையொத்த சம கால சேவையும், தராதரமும் உள்ள 10-10-94 இல் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஓர் ஆசிரியருக்கும் இடையில் ஒய்வூதியத்திலுள்ள வேறுபாடுகளையும் பற்றி ஆராயப்பட்டது.

கரி

## வட கிழக்கு

# ஆசிரியர்களை வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்ய முடியாது!

## அமைச்சு செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''வடக்கு கிழக்கு பகுதிகளில் ஏழாயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர் பற்ருக்குறை நிலவுகின்றது. இந்நிலையில் எந்த ஒரு ஆசிரியரையும் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு வெளியே இடமாற்றம் செய்ய முடியாது'' இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு சு. டிவகலாலா தெரிவித்தார்.

உடுவில் கல்விக்கோட்டஅதிபர்கள் ஆசிரியர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:

சிற்றூழியர் தரத்திலுள்ள பலருக்கு வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினூடாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சுடன் தொடர்பு கொண்டு 180 நாள் வேலைசெய்த சிற்றூழியர்களை நிரந்தர சேவையில சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாணததின் சரியான தளநிலை இதுவரையில் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சில் இல்லாதபடியால் பல செயல் திட்டங்களை செய்யமுடியாதிருக்கின்றது.

வன்னிப் பிரதேசத்தில் க. பொ. த, சாதாரணதர வகுப்புகளில் கணிதபாடம் கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. அதேபோல உடற்பயிற்சி, நடனம், சித்திரம் போன்ற பாடங்களுக்கும் ஆசிரியர் பற்ருக்குறை நிலவுகின்றது.

வடக்கு கிழக்குப்பகுதிகளில் இயங்கிவரும் 18 தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கும் கூட இடமாற்றம் மறுக்கப்படும் நிலை விரைவில் கொண்டுவரப்படும்.

இந்த மண்ணின் கல்வி வளர்ச்சிக்கான முழுப்பொறுப்

[5-ம் பக்கம் பார்க்க]

# வெளிக்கள ஊழியர்களுக்கு மூன்று நாள் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியததின் ஆதரவுடன் அனர்த்தங்கள் இடம்பெயர்வு சம்பந்தமாக மாநகரசபை சுகாதாரப் பகுதியின் வெளிக்கள ஊழியர்களுக்கான பயிற்சி யாழ். மாநரசபை சுகாதாரப் பகுதியினுல் நாவலர் மண்டபத்தில் இன்று 29ம் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு நடாத்தப்படும்.

இப்பயிற்சியில் அனர்த்தங்கள் அதன் விளைவாக ஏற்படும் பிரச்னைகள் குறிப்பாக இடம் பெயர்வின் தாக்கங்கள் பற்றி விரிவாக ஆராயப்படும். இவற்றை முகம் கொடுக்க வெளிக்கள ஊழியர் எவ்வாறு

(5ம் பக்கம் பார்க்க)

# "ஈழப்போருக்கு வீறுசேர்க்க உணவு உற்பத்தியில் ஈடுபடுவோம்"

## பொருண்மிய கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மூன்றும் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டு எமது தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்படைந்துள்ள இவ்வேளையில் போராட்டத்திற்கு வீறுசேர்க்க உணவு உற்பத்திப் போராட்டத்தை முன்னெடுக்க ஒன்றுபடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது,

இது தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்க பட்டுள்ளதாவது: மூன்றும் கட்ட ஈழப்போரில் விடுதலைப்புலிகளின் 'தாக்குதல்களால் சிறிலங்காவின் முப்படைகளும் பலவீனமுற்றுள்ள இவ்வேளை ஸ்ரீலங்கா அரசானது தனது சகல பலத்தையும் ஒன்று திரட்டி தமிழீழ மக்கள் மீது போர் அழுத்தத்தை திணிக்கவும் பொருளாதார ரீதியில் நசுக்கவும் திட்டமிட்டு வருகிறது. இதனடிப்படையில் இங்கு உணவுத் தடையை ஏற்படுத்தி மக்களின் அன்றாட வாழ்க்கையை சிதைவடையச்செய்து வெற்றிகொண்டு நிற்கும் போராட்டத்தை நசுக்கவும் எண்ணியுள்ளது.

எனவே எமது தேசத்தை மீட்பதற்கான போரில் அணிதிரண்டு போராட வேண்டிய அதேவேளை உணவு உற்பத்திப் போராட்டத்தையும் முன்னெடுக்கத் தயாராவோம்.

வளமான எங்கள் தேசத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் தரிசாகவிடாது எமது தேசத்தின் தன்னிறைவுப் பொருண்மிய லட்சியத்தில் உறுதிபூண்டு சிறுதானியச் செய்கை மற்றும் கிழங்குப் பயிர்ச் செய்கையையும், மரக்கறிச் செய்கையையும் மேற்கொண்டு எமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்து இனவாத அரசின் தடைகளை உடைத்தெறிய அணிதிரள்வோம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

# சூழல் மாசடைதலிலிருந்து தமிழீழ மண்ணைக் காப்போம்

(யாழ்ப்பாணம்)

''இன்று உலகளாவிய ரீதியில் மிகவும் ஒரு அபாயகரமான அச்சுறுத்தல் பிரச்னையாக சூழல் மாசடைதல் உருவாகியுள்ளது. பாரிய அளவிலான தாக்கத்தை சூழல் மாசடைதலினுல் பல உலக நாடுகள் சந்தித்துள்ளன.

இச்சூழல். பாதுப்பைநிவர்த்தி செய்வதற்கு பல நாடுகள் தமது பெருமளவு நிதியினையும் வளத்தினையும் பயன்படுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது, அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சூழலியல் சீர்கேட்டினுல் பாதிக்கப்பட்ட நாடுகள் இதற்குப் பிராயச்சித்தம் செய்யும் முகமாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் ''உலக சூழல் தினம்'' என்ற நாளைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தினத்தை ஒவ்வொரு வருடமும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் எச்சரிக்கையான நாளாகவும் நினைவு கூரப்படுகிறது. எனவே தமிழீழ மண்ணிலும் சூழல் மாசடைவதால் பெருமளவு நிதியினையும், வளத்தினையும் நாம் இழக்காது எமது தமிழீழ நாட்டை முற்கூட்டியே சூழல் அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு நாம அனைவரும் செயற்படவேண்டியவர்களாக உள்ளோம்.

சூழலைப் பேணும் நன்நோக்கினைப் பிரகடனப்படுத்தி நிற்கும் நாளாகிய யூன் 5ம் நாளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளில் தமிழீழ மக்களாகிய நாம் அனைவரும் சூழல் தொடர்பான விழிப்புணர்வில் ஈடுபடுவதுடன் பாடசாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும், கரும பீடங்களிலும், பொது அமைப்புகளிலும விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு எமது சூழலைப் பாதுகாப்பதற்கு எதை எதைச் செய்யலாமோ அவற்றையெல்லாம் இந்நன் நாளிலே செய்து நலமான சூழலை வருங்காலச் சந்ததிக்கு ஒப்படைப்போம். .சி

## ஆசிய அபிவிருத்தி வங்கி

# கூட்டுறவு சங்க புனரமைப்பிற்கு 265 கோடி ரூபாவை உதவும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களல் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களை புனரமைக்கவும், செய்யல்பாடுகளை விரிவபடுத்தவும் ஆசிய அபிருத்தி வங்கி இருநூற்றி அறுபத்தைந்து கோடி ரூபாய்க்கான திட்டமொன்றை ஏற்று செயல்படுத்தவுள்ளது. இந்நடவடிக்கையால் தமிழ்ப் பிரதேசங்களில் கூட்டுறவுத் துறையை வளமுள்ளதாக மாற்றியமைக்க முடியும்.

இத்தகவலை, வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் சுந்தரம்டி வகலாலா வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்பாடு செய்பட்ட தீவக கூட்டுறவு சங்க சமாசங்களின் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் பொ. மாசிலாமணி தலைமைதாங்கினர். இந்நிகழ்வின்போது தீவக கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களும், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களும், இராணுவ நடவடிக்கைளால் தமக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றியும், தமக்கு நிவாரணம் வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தனர். இழப்பீடுகள் சம்பந்தமான மகஜர் ஒன்றும் மாகாண கூட்டுறவு ஆணையாளரிடம் கொடுக்கப்பட்டது.

திரு, டிவகலாலா தொடர்ந்து உரையாற்றுகையில்: வடக்கு கிழக்கு மாகாணகூட்டுறவு பிரிவை பொறுப்பேற்ற போது நிர்வாக கட்டமைப்புகள் மிகவும் பலவீனமாக இருந்தன. இதனை சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும் செயலாளருடனும் தொடர்பு கொண்டு இங்குள்ள வெற்றிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடபகுதி கிழக்கு மாகாணத்தை விட எல்லாவகையிலும் பின்தங்கிய நிலையில் இருப்பதை அறிந்து அதனை நீக்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள பிரச்னை குறித்து உயர்மட்ட அதிகாரிகள் கலந்தாலோசனையொன்றை செயதகத்தில் கூட்டி சில பணிப்புரைகளை விடுக்கவுள்ளேன். அவை செயல்படாவிட்டால் அமைச்சு மட்டத்தில் அதற்கான பணிப்புரையை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்ருர். -எஸ்-ஷி

### தீக்குளிப்பு பொங்கல்

[வேலணை]

நயினுதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த தீக்குளிப்பு பொங்கல் வேள்வி விழா அடுத்த மாதம் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்களுக்கு நடைபெறும்.

ஒன்பதாவது தினமான (10-ம் திகதி) சனிக்கிழமை காலை 7 மணிக்கு பொங்கலுக்கான நாயக பானை வைத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருக்குளிர்த்தி அபிஷேக ஆராதனைகளுடன் முடிவுறவிருக்கிறது. 75 ரி

### தமிழகத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதுவும் அவர் இந்தியாவில் வந்து இவ்விதம் பேசியுள்ளது கண்டிக்கத்தக்கது.

இந்தியாவின் விடுதலை வீரர்கள் பகத்சிங், ராஜ்குரு ஆகியோருடன் பிரபாகனை அவர் ஒப்பிட்டு பேசியுள்ளார். இது இந்தியாவை அவமதிக்கும் செயலாகும். இனி அவர் இந்தியா வரும் போது அவருக்கு எனது தலைமையில் இந்திரா காங்கிரஸின் சிறுபான்மையினர் பிரிவு கறுப்புக் கொடி காட்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ரி

### வட-கிழக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பும் பாடசாலை அதிபர், ஆசியர்களுடைய கையில் தங்கியுள்ளது. உங்களுடைய தேவைகளை நிறைவுசெய்வதே வடக்கு கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் கடமை, எனவே உங்கள் தேவைகள், குறைபாடுகளை எமக்கு அறிய வைத்தால் அவை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் மேலும் கூறினுர். 109-ரி

### ஆயுதங்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் தான் பேச்சு வார்த்தைகளில் நேரடியாகப் பங்குபற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திருமதி சந்திரிகா ஆட்சியைக் கைப்பற்றியதும் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயாரென அறிவித்த அரசு, தற்போது மீண்டும் மோதல் வெடித்ததைத் தொடர்ந்து இவ்வாருன நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது.

இதேவேளை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் சாத்தியம் பற்றி ஆராய்வதற்கு, கனேடிய இராஜதந்திரி ஒருவர் எதிர்வரும் 31ம் திகதி கொழும்பு வரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ரி சி

### புலிகளால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ எறிகணைகள் - 41
★ பரா எறிகணைகள் - 12
★ பூஸ்டர் - 145
★ எயின் போஸ் - 07
★ துப்பரவாக்கும் தொகுதி - 02
★ 60 மில்லி மீற்றர் மோட்டர் - 05
★ அதற்குரிய ஸ்கோப் -05
★ அதற்குரிய லிங் -896
★ நடுத்தர ரவைகள் - 45, 454
★ டொங்கான் -04
★ ரி - 56 இரண்டு ரக துப்பாக்கிகள் - 10
★ ரி 56 ஒன்றுரக துப்பாக்கிகள் -07
★ ரி - 81 ரக துப்பாக்கிகள் - 02
★ அதற்குரிய மகசீன் - 01
★ கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி - 38
★ வயர் ரோல் - 04
★ எக்ஸ் புளோடர் - 17
★ ஜே. ஆர். கைக் குண்டுகள் 58
★ விநியோக கோல்சர் -03
★ ஸ்ரெச்சர் - 04
★ தொலைத்தொடர்பு கருவி - 01
★ எயின்போஸ் - 03
★ எறிகணைகள் - 182
★ பராஎறிகணைகள் - 24
★ துப்பரவாக்கும் தொகுதி - 2
★ பூஸ்டர் பெட்டி - 02
★ புல்நூறு - 01
★ பி.கே எல். எம்.ஜி. - 01
★ அதற்குரிய ட்ரம் மகசீன் - 02
★ செயின் பெட்டி - 03
★ மேலதிக பரல் - 03
★ பைபோட் - 03
★ லிங்குடன் ரவைகள் - 1446
★ ரவைகள் - 1200
★ ஆர், பி. ஜி - 05
★ அதற்குரிய எறிகணைகள் - 46
★ புகைப்படக்கருவி - 01
★ சினைப்பர் கோலஸர் - 01
★ ஆர். பி. ஜிபுரொப்பிளர் - 05
★ ஏ.கே.எல்.எம்.எம். ஜி - 05
★ ரம் மகசீன் - 29
★ வோக்கி - 01
★ தொலைநோக்கி - 02
★ நேட்டோரவை லிங்குடன் - 174
★ பென்டலைற் - 06
★ எலக்ரிக் டிக்னேற்றர் - 10
★ கிற்பாக் - 15
★ உழவு இயந்திரம் - 01
★ தொலைக்காட்சி பெட்டி - 01
★ டெக் - 01
★ போக்கஸ் லைற் - 02
★ சப்பாத்துக்கள் - 05 [சோடி]

க-சி

### வெளிக்கள

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படவேண்டு மெனவும் பயிற்சி வழங்கப்படும். தடுப்பு நடவடிக்கைகள் எவ்வாறுஇருக்கவேண்டும் என்றும் அவசர சிகிச்சை சேவைகள் பற்றியும் விளக்கம் கொடுக்கப்படும்5 170 ரி

### 5,800 தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

மேலும் படையினர் இவ்வாறு தமிழ் இளைஞர்களை வகைதொகையின்றிக் கைது செய்வது, மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்றும் 'ஹிரு' தெரிவித்துள்ளது. ம சி

### தொலைத் தொடர்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த இந்தப் பகுதியில் எப்படி இக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது என்பது குறித்து படையினருக்கு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதாம். இக்குண்டு, 'நேரக் கணிப்பு'க் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

இதையடுத்து வவுனியாவின் பல பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சி

### அடர்ந்த காட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியோட அவர்களையும் விடுதலைப் புலிகள் தப்பவிடாது துரத்தி துரத்தி தாக்கினர். இத்தாக்குதலினுல் மேலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

தரவைக்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்திய வேளையில், கூழாவடி இராணுவ முகாமிலிருந்து முன்னேறி வந்த இராணுவ அணியையும் விடுதலைப் புலிகளின் மற்ருேர் அணி தாக்குதலைத் தொடுத்து விரட்டியடித்துள்ளது.

தர வக்குளம் இராணுவ முகாம் தகர்க்கப்பட்ட சமயம், 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அந்த முகாமில் நிலைகொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தில் நாப்பத்தாவில், வாரடித்தசோலை ஆகிய முகாம்களில் இருந்து படையினர் கொண்டுவரப்பட்டு, தரவைக்குளம் இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டிருந்தது.

அடர்ந்த காட்டிலிருந்த இந்த முகாம் மீது 500க்கும் மேற்பட்ட புலிகள் சுற்றி வளைத்து, மிகக் கடும் தாக்குதலை மேற்கொண்டதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். க சி

### பூரணமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பை கட்டி எழுப்புவதையே அரசாங்கம் விரும்புகிறது.

கடந்த 12 வருடங்களாக முரண்பட்ட செய்தி ஊயும். முரண்பட்ட தலைமைத்துவத்தையும் நாளுக்கு நாள் மாற்றமடையும் முரண்பாடான யுத்தமுறையை கையாளும் ஓர் பிளவுபட்ட இராணுவ அமைப்பே இருந்து வந்தது. அதனை வைத்திருக்க அரசாங்கம் விரும்பவில்லை.

தற்போதைய நெருக்கடியின் போது தகவல் தொடர்பு சாதனங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இப்பொறுப்புணர்வுகள் தேசிய நலன் கருதியும் ஜனநாயக கட்டுக்கோப்புடனும் நடக்காவிட்டால் இதனை அரசாங்கம் பாரதூரமாக கருதி கடும் நடவடிக்கையெடுக்க வேண்டி ஏற்படும்.

அரசாங்கம் வழங்குவதற்கு பதிலாக அரசாங்கத்திற்கு கிடைப்பதை நோக்கும் போது அரசுக்கு பலத்த ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது.

தொடர்பு சாதனங்கள் மீது எந்தவித கட்டுப்பாடும் கொண்டுவருவதற்கு அமைச்சரும் நானும் விரும்பல்லை ஆகவே இத்தகைய கட்டுப்பாடுகளை கொண்டுவருமாறு தயவு செய்து நிர்ப்பந்திக்க வேண்டாம் என்ருர். க-சி

★ நள்ளிரவில் கொடூரம் :

# ரஷ்யத் தீவில் பூமியதிர்ச்சி 2,500 பேர் உயிரிழந்தனர்

(மாஸ்கோ)

ரஷ்யாவின் தூர கிழக்கு தீவான சஹாலினில் இடம் பெற்றகடுமையானபூமியதிர்ச்சியில் 2,500 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

நேற்று நள்ளிரவு இடம் பெற்ற இப்பூமியதிர்வு ஏழரை ரிக்டர் சக்தி வாய்ந்தது இந்த பூமிபதிர்வில் லெட்டகொஸ் நகரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது

இப்பூமியதிர்வின் போது ஏற்பட்ட இடிபாடுகளுள் சிக்கியவர்களில் படுகாயமடைந்த நிலையில் 125 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். இந்த நகரில் சுமார் மூவாயிரம் பேர் வாழ்ந்து வந்தனர்.

கடுமையான பனிமூட்டம் மீட்புப் பணிக்கு பெரும் தடையாக இருப்பதால் மீட்பு பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் குடிநீர், தொலைபேசித் தொடர்கள் யாவும் துண்டிக்கப்பட்டு விட்டன.

மீட்புப்பணிக்காக ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டர்களும் விமானம் ஒன்றும் உணவுப்பொருட்களுடன் இத்தீவுக்கு அனுப்பப்பட்டுள்ளன- பூமியதிர்வால் பல கட்டிடங்கள் முற்ருக தகர்ந்து விட்டதால் இடிபாடுகளுக்கிடையில் பலர் சிக்கியிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

பூமியதிர்வால் கடுமையாக பாதிக்கப்பட்ட இத்தீவிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் ஜப்பான் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சி

# இல. தமிழர் அறுவர் தமிழகத்தில் கைது

[சென்னை]

வெளிநாட்டவர்களைக் கடத்தி அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி, இலங்கைத் தமிழர் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்ப் போராளிகளுக்கு நிதி திரட்டுவதற்காகவே, இவர்கள் இவ்வாறு செய்ததாகக் குடிவரவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆறு தமிழர்களிடம் இருந்து கனடா, அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை போன்ற நாடுகளின் போலியான ஆவணங்களும்தஸ்தாவேஜுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# மணலாறு மோதலில் 5 இராணுவம் காயம்

[மணலாறு]

மணலாறு காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில், நேற்று முன்தினம் கடும் மோதல்கள் இடம் பெற்றதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

மணலாறு ஆண்டான்குளம் பகுதியில் இம்மோதல் இடம் பெற்றது. இம்மோதலில 5 படையினர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

காட்டுப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தியபோதே இம் மோதல் இடம் பெற்றதாகவும், மோதல் சில நிமிட நேரம் நடைபெற்றதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். ரி சி

# ஆயுதக் கொள்வனவு குறித்து படை அதிகாரிகள் கண்டனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்காக தற்போது வெளிநாடுகளில் அரசு கொள்வனவு செய்யும் இராணுவ தளபாடங்கள் குறித்து யுத்த முனையில் உள்ள படை அதிகாரிகள் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் கெரில்லாத்தாக்குதலை நடாத்தி வரும் புலிகளுடனான யுத்தத்திற்கு தேவைப்படும் ஆயுதங்களையும், இராணுவதளபாடங்களையும் கொள்வனவு செய்யாமல் நாடுகளுக்கிடையிலான யுத்தங்களிற்கு பயன்படுத்தும் ஆயுதங்களே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதகவும் தெரிவித்துள்ளனர்.

யுத்தமுனைகளில் போரிடும் படை அதிகாரிகள் ஆயுதக் கொள்வனவில் ஈடுபடாமல் கொழும்பில் சொகுசாக இருக்கும் படை அதிகாரிகள் ஆயுதக்கொள்வனவிற்கு செல்வது பெரும் பின்விளைவுகளையே ஏற்படுத்தும். தேவையற்ற ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் கொள்வனவு செய்வதால் பலன் எதுவும் இல்லையென்றும் கூறியுள்ளனர். -சி

# நாட்டு நிலைமை குறித்து ஐ. தே. க.வினருடன் சந்திரிகா பேசுவார்

[கொழும்பு]

நாட்டின் தற்போதைய சூழ்நிலை குறித்தும் இனப்பிரச்னைதீர்வு தொடர்பாகவும் அரசு முன்வைக்கவுள்ள தீர்வுத்திட்டம் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா ஐ. தே. க தலைவர்களை விரைவில் சந்திக்கவுள்ளார்.

பெரும்பாலும் இச்சந்திப்பு அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறுமென தெரிவிக்கப் படுகிறது எதிர்வரும் 30-ம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணியினரை சந்திக்கும் ஜனாதிபதி சந்திரிகா இதன் பின்பே ஐ. தே. க. வினரை சந்திக்கவுள்ளாராம்.

இனப்பிரச்னைதீர்வு தொடர்பாக அரசு முன்வைக்கவுள்ள திட்டமானது தேசியப்பிரச்னையாக உள்ளதால தனது தீர்வுத் திட்டத்தை கட்சிகளிடம் முன்வைக்கமுன் ஐ தே. கவுடன் அரசு தரபினர் ஆலோசனை நடாத்த வேண்டுமென ஐ. தே, கவினர் கோரியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சி

# ஆயுதம் வழங்கும் நாடுகளின் பெயரை கூற அரசு மறுப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு இராணுவ தளபாடங்களை வழங்கும் வெளிநாடுகளின் பெயர்களை வெளியிட அரசு மறுத்துள்ளது.

இதுகுறித்து பத்திரிகையாளர்கள் அமைச்சர் ஜி. எல். பீரிஸை கேட்ட போது பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நாடுகளின் பெயர்களையோ பெற்ற இராணுவ தளபாடங்களின் விபரங்களையோ வெளியிட முடியாதெனவும் தெரிவித்ததாக பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை வெளிநாடுகளுக்கு ஆயுதக் கொள்வனவிற்காக சென்ற முப்படைகளையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுக்கள் நாடு திரும்பிய வண்ணமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

## படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தரவைக் குளம் முகாம் தகர்த்தழிக்கப்பட்ட பின் பல மணி நேரத்திற்கு பின் அங்கு வந்த படையினர் முகாமை சுற்றியுள்ள காடுகளில் காணாமல் போன படையினரை தேடி வருவதாகவும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் படைவட்டாரங்கள் தெரிவித்தன. சி

## இலவச சீருடைகள்

(கொழும்புத்துறை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகதென்மராட்சிப் பகுதியினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் பாலர் பாடசாலைச் சிறார்களுக்கெனத் தைக்கப்பட்ட இலவச சீருடைகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுளது. -154

# மன்னார், மணலாறு மோதலில் எட்டு போராளிகள் வீரச்சாவு

(மணலாறு)

மன்னார் ,மணலாறு பகுதியில் கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற மோதலில் இரு பெண்போராளிகள் உட்பட எட்டுப் புலிகள் வீரச்சாவடைந்தனர் மணலாறு மோதலில் முல்லை மாவட்ட துணைத்தளபதியான லெப். கேணல் அசுரன் (இராமசாமி இராமச்சந்திரன் மன்னார்) வீரச்சாவடைந்தார்,

இவருடன் மணலாறு கோட்டப் பொறுப்பாளர் மேஜர் கோமகன்- ஜோசப் (அந்தோனிப்பிள்ளை யோகராஜா- மட்டக்களப்பு) லெப் செல்வண்ணன்- நியாஸ் (அழகையா ஜெயசங்கர்- மட்டக்களப்பு) லெப் இளந்தமிழன் லக்ஸ்மன் (காயன் சத்தியசீலன், லெப். மதன் (நடேசன் சுதாகரன்) 2ம் லெப். முல்லைச்செழியன் (கணேஸ் நந்தகுமார்- முல்லைத்தீவு) ஆகிய ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர் நேற்று முன் தினம் மாலை இம் மோதல் இடம்பெற்றது.

இதேவேளை நேற்று முன் தினம் மன்னாரில் இடம்பெற்ற நேரடி மோதலில் 2ம் லெப். தாமரா (ஜோன் பற்றிக் லொஜிகலா- மன்னார்) வீர வேங்கை வித்தகி (விமலாதேவி சின்னராசா- யாழ்ப்பாணம்)ஆகிய இரு பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர் சி

★ மண்டைதீவிலிருந்து

# அராலி நோக்கி ஷெல் வீச்சு பெருமளவு மக்கள் இடம்பெயர்வு

(வட்டுக்கோட்டை)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் நேற்றுக் காலை வரை அராலிப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

சரமாரியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல்கள் அராலி கிழக்கு அராலி தெற்குப்பகுதி குடிமனைகளை அண்டிய வயல் வெளிப் பிரதேசங்களில் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன.

ஷெல் தாக்குதல் சத்தங்களின் பீதியினால் பல குடும்பங்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்து அராலி வடக்கு வட்டுக்கோட்டை துணவி பகுதிகளில் தஞ்சமடைந்தனர். சிலர் அப்பகுதிகளில் உள்ள கோவில்களில் தஞ்சமடைந்தனர்.

இப்பகுதி மக்களுக்கு தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டு வருகின்ற போதிலும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சு மக்களை கதி கலங்கச் செய்தது குறிப்பிடத்தக்கது. 139-சி

## சீனி விலை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் வாத்தக நிலையங்களில் சீனியின் விலை அதிகரித்துள்ளது. கிலோ 40 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை தற்பொழுது சீனி விற்கப்படுகிறது. -59

## கிழக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் படையினரின் பாரிய தாக்குதலை தடுத்து நிறுத்தும் நோக்கில் புலிகள் கிழக்கில் பாரிய தாக்குதல்களை நடாத்தி வருகிறார்கள் போல் தென்படுகிறது இதேவேளை வடக்கிலும் பல படைமுகாம்களை சுற்றி முற்றுகையிட்டுள்ளனர்.

கிழக்கில் அவர்கள் மேற்கொண்டுவரும் தாக்குதலில் படையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டு வருகிறது. கிழக்கில் புலிகள் நினைத்த இடத்தில் நினைத்தவாறு தாக்குதல்களை தொடுக்கிறார்கள் இதனால் புலிகளுககு எதிராக தாக்குதலை நடத்த முடியாமல் புலிகளின் தாக்குதலை தடுக்கும் தற்காப்பு நடவடிக்கையிலேயே படையினர் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் கிழக்கை முற்றுக தம்வசப்படுத்துவது என்பது தற்போதைய நிலையில் படையினரால் முடியாது. இதற்கு பல நாட்கள் செல்லலாம் அதற்கிடையில் புலிகள் தம்மை கிழக்கில் நன்கு பலப்படுத்தி விடுவார்கள் எனவும் தெரிவித்தது. சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.